**தேதி :** 05.11.2025 **SC.No. :** 373/2023 PW **:3** முகமது அபுபக்கர் சித்திக்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**சாட்சி மனுவில் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

28.12.2022ம் தேதி, இரவு 08.45 மணிக்கு சண்டை நடந்ததா? என்றால் எனக்கு தெரியாது. திடீரென சிவா என்பவர், தனது இடுப்பின் மறைவில் வைத்திருந்த கத்தியை எடுத்து மாரியப்பனின் முதுகின் இடது பக்கம் குத்தினார் என்றால் சரியல்ல. பின்னர், கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் மாரியப்பனை குத்தும் போது, அதை அவர் தடுத்ததால் கையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்த்த நானும், முகமது இப்ராஹிம், சாகுல் ஹமீது ஆகியோர்கள் எதிரியை பிடிக்க முயற்சித்தபோது, எதிரி கத்தியை காட்டி மிரட்டி விட்டு ஓடிவிட்டார் என்றால் சரியல்ல. காயம்பட்ட மாரியப்பனை ஆட்டோ மூலமாக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும், சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் நான் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.06 18:25:40 +0530